8th September 1959]

Sri K. ANBAZHAGAN : தமிழ்நாட்டோடு நெருங்கி இருக்கிற பாண்டிச்சேரியில் மதுவிலக்குச் சட்டம் வற்புறுத்தப்படாது என்று முதல் அமைச்சர் அவர்கள் கருத்துத் தெரிவித்திருக்கிறார்களா ?

The Hon. Sri K. KAMARAJ : பாண்டிச்சேரியில் மதுவிலக்குச் சட்டம் வேண்டுமா வேண்டாமா என்பதை பாண்டிச்சேரியைச் சேர்ந்தவர்கள் நிர்ண யித்துக் கொள்ளவேண்டும். நான் சொல்லவேண்டியதில்லை.

Case against Sri U. Muthuramalinga Thevar

* 220 *Q.*—**Sri V. K. KOTHANDARAMAN :** கனம் உள்விவகார அமைச்சர் அவர்கள் தயவுசெய்து பதிலளிப்பாரா—

(அ) முதுகுளத்தூர் சம்பந்தமாக திரு. முத்துராமலிங்க தேவர் பேரில் போடப்பட்ட கேசுக்கு எவ்வளவு செலவானது ?

(ஆ) இதில் வாதாட சர்க்கார் வக்கீல்கள் அல்லாமல் மற்றத் தனிப்பட்ட வக்கீல்களையும் நியமிக்கப்பட்டதா ?

(இ) எத்தனை பேர்கள் ?

(ஈ) அவர்களுக்கு எவ்வளவு தொகை பீஸ் கொடுக்கப்பட்டது ?

The Hon. Sri M. BHAKTAVATSALAM : (*a*) The time and the labour involved in collecting the information will not be commensurate with the result achieved.

(*b*) Yes, Sir.

(*c*) Two.

(*d*) Rs. 55,491·48 nP.

* 221 *Q.*—**Sri N. K. PALANISAMI** (on behalf of **Sri M. KALYANASUNDARAM**) : Will the Hon. the Minister for Home be pleased to state—

(*a*) the number of Special Public Prosecutors engaged to conduct the case against Sri U. Muthuramalinga Thevar, before the Special Additional Sessions Judge at Pudukkottai; and

(*b*) the total remuneration paid to the Special Public Prosecutors?

The Hon. Sri M. BHAKTAVATSALAM : (*a*) Two.

(*b*) Rs. 24,991·48 nP.

Sri V. K. KOTHANDARAMAN : திருச்சி ஜில்லா பப்ளிக் ப்ராசிக்யூடர் நல்ல திறமை வாய்ந்தவர். இந்தக் கேஸை நடத்துகிறேன் என்று அவர் சொன்னார். அவரிடம் கொடுக்காது வேறு ஒரு வக்கீலை வைத்து கேஸ் நடத்தவேண்டிய அவசியம் என்ன ?

The Hon. Sri M. BHAKTAVATSALAM : அரசாங்கம் இதைப் பரிசீலனை செய்துதான் நல்ல வழக்கு அறிஞர்களை நியமிக்கிறார்கள். பப்ளிக் ப்ராசிக்யூடரே நான் இந்த கேஸை எடுத்து நடத்துகிறேன் என்று சொல்ல முடியாது. அப்படிச் சொல்லவும் இல்லை.

Sri V. K. KOTHANDARAMAN : திருச்சியில் இருக்கக்கூடிய ஒரு லாயர் இன்னும் குறைந்த செலவில் இந்த வழக்கை நடத்துவதாகச் சொல்லியிருக்கும்போது செங்கல்பட்டில் இருக்கக்கூடிய ஒரு வக்கீலைக் கொண்டு, அதுவும் அதிகப்படியான பணச் செலவில் இந்தக் கேஸை நடத்த வேண்டிய அவசியம் என்ன ஏற்பட்டது ?

LEGISLATIVE ASSEMBLY TRIUMPHS ALONE TRIUMPHS